# கர்வம் கொண்ட முயல்

ஒரு காட்டில் ஒரு பெரிய ______ இருந்தது. அந்த ஆலமரத்தில் குட்டி ______ ஒன்று வசித்து வந்தது. குட்டி முயலுக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை, என்றாவது ஒருநாள் தந்திரமுள்ள நரியைத் தன் அறிவினால் வெல்ல வேண்டும் என்று. இதனை எல்லோரிடமும் சொல்லித் தன் அறிவுக்கூர்மையை நிருபிப்பேன் என்று ______ விடும். பிறர் கூறும் அறிவுரையை ______ செய்யும். இப்படியாக சில நாள் சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் நரியின் ஊளைச்சத்தத்தைக் கேட்டது. உடனே சத்தம் கேட்ட ______ நோக்கி ஓடியது. அங்கு நரி ஒன்று பள்ளத்திலிருந்து வெளியே வர முடியாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. என்ன! நரியாரே உன் ______ பலிக்கவில்லையா? என்று ஏளனமாகக் கேட்டது. மேலும் நரியின் நிலைமையைக் கண்டு முயல் ______ நரி கோபத்தை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தது. நரி ஒரு திட்டம் தீட்டிக் கொண்டது. அதன்படி தரையில் காதை வைத்து எதையோ கேட்பது போல் ______ செய்தது. என்ன கேட்கிறாய்? என்று முயல் கேட்டது. ம்ம்... இங்கே கடவுளின் ______ கேட்கிறது, கடவுள் பேசுகிறாரா? ஆமாம் இந்த உலகத்திலே ஒரு முயல் தான் அறிவாளியாம்! எந்த முயல்? அதைத்தான் சரியாகக் கேட்க முடியவில்லை. உன் அருகில் உள்ள கம்பை ______ இறக்கு. நான் பள்ளத்தைப் பெரியதாக்கிக் கேட்கிறேன் என்றது. முயல் கம்பை கீழே இறக்கியது. நரி ஒரே தாவலில் கம்பின் வழியாக பள்ளத்திலிருந்து வெளியே வந்தது. முயல் ஓடுவதற்குள் நரி முயலைப் பிடித்துக் கொன்றது.

ஆலமரம் | முயல் | சவால் | ஏளனம் | தந்திர

திசை | சிரித்த | பாசாங்கு | குரல் | குழிக்குள்